# 23. கங்கையணிவேணி.

*கலிவிருத்தம்.*

**க**ங்கையணி வேணியிறை காதலுடன் மாணார்
துங்கமலி யர்ச்சனை தொடுத்தகவி யென்னாச்
சங்கிலி பதிக்கருள்செய் தானவண நெஞ்சே
பங்கமில் குகேசனருள் பாடிநித மாடே. 1

**ஆ**டுகிலை யன்பதிலை யாளிறையை நாடிப்
பாடுகிலை யென்றுரிய பண்ணவ னறைந்த
பீடுடைய நல்லுரை பிடித்துமன னேமா
வீடுதரு சாமியை விதந்து கவிபாடே. 2

**பா**வபுணி யப்பெரு மருத்தைநல பற்றால்
ஆவியர்க ளுக்குண வருத்திமல மாரி
வீவுற விழைத்திடு மருத்துவனை மெய்யாக்
காவுதி யெனப்பரசி டாயுயர் கருத்தே. 3

**அ**ண்டமது பார்ப்பென வலங்குமுறை போற்கோள்
கொண்டவொரு சூக்கமிசை கோடலுமொண் ணாகந்
துண்டுரி யுரிப்பதென நீக்கியுள சூக்கம்
மண்டுவது மாயவுடை யானைநினை நெஞ்சே. 4

1. இத்திருப்பாட்டின் பொருள், திருத்தொண்டர் புராணத்தே தடுத்தாட் கொண்ட புராணத்து 70 - ஆஞ் செய்யுளில் "அர்ச்சனைபாட்டே யாகும்" என வருவதாம்.

2. **நல்லுரை** : இது, திருவாசகத் திருச்சதகத்தே "ஆடுகின்றிலை" என்றற்றொடக்கத்துத் திருப்பாட லென்க. இதன் பொருட்கியைய ஸ்ரீமந் மாணிக்கவாசகனாரும் பாடுமாரம்பத்தி னினைத்தாரெனத் திருவாதவூரர் புராணத் திருவம்பலச் சருக்கத்தில்,

   "வெண்பிறை முடித்த வேணி விண்ணவ னன்பி லாத பண்பின ரெனினுந் தன்னைப் பாடினர்க் கிரங்கும்" என வருதலுங் காண்க.

3. **மல மாரி** = மலநோய்.

4. **"அண்டமது பார்ப்பு"** - அண்டம் = முட்டை. பார்ப்பு = குஞ்சு.

**அ**ந்தமுறு சாந்தோக்கி யத்தில்வெளி யாமா
பந்தமி லருந்தகர வுபாசனையை நேர
எந்தநெறி யுள்ளுமிலை யேசின்மன னேநீ
அந்தநிலை தன்னிலுடை யானைநினை யாயே. 5

**நா**மமுரு வென்றசக லக்கண மகன்றோர்
ஏமமுறு வானினிய வீரமன னேநீ
ஏமமதி சத்தெனு மிலக்கணம தாமா
சாமியென வுள்ளபொரு டன்னைநினை யாயே. 6

**ஆ**கமுத லாநுவ லசித்தையறி சித்தாய்
ஊகமிட லுஞ்சக முரித்தெனலு நன்னர்ப்
பாகமி லிரும்பிரதி பந்தமிதை நூறி
ஏகவிறை தன்னைமன னேநினைதி யென்றும். 7

**சி**ன்னமதி நானரிய தெய்வமதை யெவ்வா
றுன்னுவ லெனத்தளர் வுறாய்சிறிய கண்ணும்
பின்னமற மேவிய பெருந்திகையு நோக்கும்
என்னுமுறை கொண்டுகுக னெந்தையரு ணாடே. 8

**கா**டுபுகு முன்னிறை கருத்துள்வரி னன்னோன்
பீடுபெற வாடுநிரல் காட்டியொர் பெருத்த
மாடுதரு வானது மதிக்கரிய தீம்பால்
நாடொறு மளிக்குமிடி நந்துமன னேயோ. 9

---

5. **"அந்தமுறு சாந்தோக்கியம்"** என்றது, சாந்தோக்கியம் வேதாந்தத்துள தென்பதை யறிவுறுப்ப தாயிற்று. தகரோபாசனையைத் 'தகரவுபாசனை' என்றது தமிழ்நூன் முடிபு.

6. **ஏமமதிசத் தெனுமிலக்கணம்** = சச்சிதானந்தலக்ஷணம்; ஏமம் = ஆனந்தம்; மதி = சித்து.

8. **சின்னமதி** = சிறுமையுடையபுத்தி ; சின்னம் சிறுமைப்பொருளில் வருதலை 21 - ஆம் பத்தின் "பொன்னுமீன்ற" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரையி னுணர்க.

**மெ**ய்யருள் விளக்கமிகு மெய்ப்புக ழறைந்தோன்
தெய்வமெது வோவது சிறந்தபொரு ளத்தை
ஐயமற வுள்ளியவ னுக்கெளிய வுன்னைக்
கையடைசெய் துய்திநனி காமுறு கருத்தே.